# போர்வாள்

ியர்கள் : காஞ்சி, மணிமொழியார் தனி இதழ் அணு 1½
இளஞ்செழியன், B. A. (Hons.) வெளிநாடு அணு 2

சென்னை, திருவள்ளுவர் ஆண்டு ௧௯௭௯
தை ௧௧
24—1—48 சனிக்கிழமை

வீச்சு 23

## ற்பனை அல்ல!

(வித்வான் அன்பு கணபதி)

மிழ் மணி! ஏது, இப்படிக்
ரைப் பக்கம் புறப்பட்
வேறு இடத்திலல்லவா,
ருப்பாய் என எதிர்பார்த்
!'

! இசைச் செல்வமா, வா
, வா! என்னை எங்கே
பார்த்தாய்?'

ன்ன நீ சொல்வது வியப்பா
றதே! இன்றைக்குத்
சங்க ஆண்டுவிழா அல்
பேராசிரியர் நச்சினார்க்
ர், 'முத்தமிழ்' என்பது
பேசுகிறார் என்பது
த் தெரியாதா? கேட்க
டிய பேச்சு அல்லவா?
றவிட மாட்டாயே!'

ல்லாம் தெரியும்! வர வர,
பாது தமிழ்க் கூட்டங்கள்
லே எனக்குப் போகப்
வில்லை. எல்லாம் பழங்
அந்தக் காலத்தில் தமிழர்
அப்படி இருந்தார்கள், இப்படி இருந்தார்கள் என்று... இவர்களுக்கு உலகம் போகிற போக்குத் தெரியவில்லை. தமிழர்கள் இப்போது எபபடி இருக்கிறார்கள்? இனி எப்படி இருக்க வேண்டும்?—இவைகளைப் பற்றி யாராவது, ஏதாவது பேசுகிறார்களா? இன்னும் சொல்லப் போனால், இவர் அவரைப் பற்றியும் அவர் இவரைப் பற்றியும் பரஸ்பரம் பரிமாறல்கள்; அரை மணி நேரம் அவையடக்கம். இவைகளைக் கழித்து விட்டால், இன்றைய தமிழ்க் கூட்டங்களில் மிஞ்சுவது என்ன இருக்கின்றது?'

'அடடே! நீ ரொம்பப் பெரிய மனிதனாகிவிட்டாயே! பேசுவது யார், தமிழ் மணிதானா?'

'சரி, நான் சொன்னால் உனக்குப் புரியாது; என்னைக் கேலி வேறு செய்வாய். உனக்காக இன்று நான் தமிழ்ச் சங்க ஆண்டு விழாவுக்கு வருகிறேன். என்னுடைய அனுபவம் எவ்வளவு தூரம் உண்மை என்பதை நீயே பார்த்துப் பிறகு சொல்.'

[சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் இளமுருகனார் தலைமையில் தமிழ்ச் சங்க ஆண்டு விழா. ஏராளமான கூட்டம். தமிழ்மணியும் இசைச் செல்வமும் மண்டபத்தின் ஓர் மூலையிலே வந்து அமருகின்றனர். பேராசிரியர் நச்சினார்க்கினியர் எழுந்து பேசுகிறார்.]

"ஆன்றவிந் தடங்கிய சான்றோராகிய தலைவரவர்களே! அறிவுச் சுடர்களாக இலங்கும் திருவாளர்களே!! திருவாட்டிகளே!!! உங்கள் பொன்னடிகளுக்கு என்னுடைய போற்றுதல்கள் உரியனவாக! இன்று நம் தமிழ்ச் சங்கத்தின் ஆறும் ஆண்டு விழா சீரிய முறையில் இங்கு நடைபெறுகிறது. இவ்விழாவுக்குத் தலைமை தாங்குபவர்கள் உயர்திருவாளர் இள முருகனார் அவர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். முருகன் தமிழ்க் கடவுள். தமிழ் முருகனின் திருப்பெயரை தமது பெயராகத் தாங்கிய இவர்கள் இன்றைய விழாவுக்குத் தலைமை தாங்குவது மிகவும் பொருத்தம் உடையதே. அதிலும், 'என்றும் இளையாய்' என்றபடி பெயரால் இளமுருகனாய்—அறிவிலல்ல — உணர்ச்சியில்—விளங்கும் தலைவரவர்களைப் பற்றி நான் உங்களுக்கு அதிகம் சொல்லத் தேவை இல்லை. அவர்களைப் பற்றி— அவர்களின் சிறப்பைப்பற்றி நீங்கள் நன்றாக அறிவீர்கள். உங்கள் முன்பு, அவர்களைப் பற்றி நான் ஏதாவது சொல்லத் தொடங்குவது 'கொல்லர் தெருவில் ஊசி விற்ற கதை' ஆகும்.......தலைவரவர்கள் பல்கலைக் கழகப் பாடநூற்குழுவின் தலைவராக விளங்குகிறார்கள். "பெண்மையின் நுண்மை'

'வேர்ச்சொல் விளக்கம்' முதலிய பல அரும்பெரும் நூல்களை ஆக்கியுள்ளார்கள். கடல் மடை திறந்ததுபோலப் பேசும் ஆற்றல் படைத்தவர்கள். இன்னபிற சிறப்புக்கள் பொருந்திய இவர்கள் சீரிய தலைமையின் கீழே பேசும் வாய்ப்புக் கிடைத்ததை ஒரு பெரும் பேருகவே கருதுகிறேன். நிற்க.

தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் திரு தணிகை அரசு சின்னுட்களுக்கு முன்பு என்னிடம் வந்தார். சங்கத்தின் ஆண்டு விழா நடக்கப் போவதாகவும், அதில் நானும் பங்கு கொண்டு பேசவேண்டும் என்றும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார். நானும் அப்போது சரி என்று ஒப்புக்கொண்டேன். 'முத்தமிழ்' என்பது நான் பேசும் தலைப்பாக இருக்கட்டும் என்று கூறிவைத்தேன். ஆனுல், பேரறிஞர்களாகிய உங்கள் முன்பு, நீங்கள் அறியாதனவாக, முத்தமிழைப்பற்றி நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? இருந்தாலும் என்னை இங்குப் பேச அழைத்திருக்கிறீர்கள். நானும் ஒப்புக்கொண்டு வந்திருக்கிறேன். ஆனுல், மிகுதியாக நான் ஏதேனும் பேசுவேன் என்று நீங்கள் எதிர்பார்த்தால், கடைசியில் ஏமாற்றம் தான் அடைவீர்கள் என்பதை முன்னமே கூறி உங்களை எச்சரிக்கின்றேன். ஏதோ நானறிந்த இரண்டொன்றைப் பற்றி, ஒரிரு வார்த்தைகள் உங்களிடம்கூறி சீக்கிரமாகவே என்னுடைய சொற்பொழிவை முடித்துக் கொள்ளுகிறேன்.

இயல், இசை, நாடகம் இந்த மூன்றும் சேர்ந்ததே முத்தமிழ். உலகில் வேறு எந்த மொழிக்கும் இல்லாத தனிச்சிறப்பு நம் தமிழுக்கு உண்டு. முடியுடை மூவேந்தர்களான சேர சோழ பாண்டியர்கள் நம் செந்தமிழைச் சிறப்புடன் வளர்த்தார்கள். மூவேந்தர்கள் என்ன, கண்ணுதற் பெருங் கடவுளே கழகமோடு இருந்து வளர்த்தார் நம் கன்னித் தமிழை என்றுல், அதன் பெருமை கழறவும் முடியுமா? இவற்றுள் இசை நடுநாயகமாக நின்று, இயலுக்கும் நாடகத்துக்கும் ஏற்றம் தருகின்றது.

மேலும், எத்துணையோ புலவர்கள்—கம்பன் என்ன, வள்ளுவன் என்ன, இளங்கோ என்ன—இவர்கள் எல்லாம் நம் பைந்தமிழைப் பண்புடன் வளர்த்தார்கள். முத்தமிழைப் பற்றி இன்னும் எவ்வளவோ சொல்லலாம். அதற்குக் காலம் இல்லை விரிக்கில் பெருகும். வீணே உங்கள் பொன்னுன காலத்தை என்னுடைய புல்லிய உரைகளால் கொள்ளைகொள்ள விரும்பவில்லை. முத்தமிழை வளர்க்க வேண்டுவது உங்கள் முதற் கடமை. இந்த அளவோடு என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்ளுகிறேன். எல்லோருக்கும் வணக்கம்."

[கைதட்டல். பேராசிரியர் நச்சினுர்க்கினியர் நாற்காலியில் உட்காருகிறுர். தலைவர் இளமுருகனுர் எழுந்து பேசத் தொடங்குகிறுர்.]

"சகோதரிகளே, சகோதரர்களே! என்னைவிட அறிவிலும் திருவிலும் சிறந்த பெரியவர்கள் இந்நகரில் எவ்வளவோ பேரிருக்க, ஒன்றுக்கும் பற்றுத என்னை இவவாண்டு விழாவிலே தலைமை பூணச் செய்ததற்குக் காரணம், உங்களுக்கு என்பால் உள்ள உள்ளன்பே என்று கருதுகிறேன். பேராசிரியர் திரு. இளமுருகனுரும் என் மீது வைத்த பேரன்பு காரணமாக உங்கள் முன்பு என்னைப் பற்றி ஏதேதோ பெருமை

யாகச் சொல்லிவிட்டார்.
கூறியவற்றுள் உண்மை
னும் ஒன்று இருக்குமா
அது நான் இளமுருகன்
பதுதான். பெயரில் மட்டும்
அறிவிலும் நான் இளையவ
முத்தமிழைப்பற்றி நச்சி
கினியர் பேசிய பிறகு, அத
மேலே நான் கூறக்கூடிய
வுரை என்ன இருக்கிறது?
ருடைய அறிவின் சிறப்பை
கள் அறிவீர்கள். உச்சி
புலவர் கொள்ளும் நச்சி
கினியர் பெயரை அல்ல
தம் பெயராக அவர் தரி
கொண்டிருக்கிறுர்! அவர்
ஞர்க்கு இனியர் என்பதை
கள் இன்று கண்டீர்கள்.
மட்டுமல்ல, அவர் நச்சுகி
வர்க்கு இனியர்; நச்சுவார்க்
இனியரே! நீங்கள் அவரு
செய்யக்கூடிய கைம்ம
என்னவென்றுல், அவர் இ
கூறிய அருங்கருத்துக்களை
படியே பின்பற்றி நடப்ப
எனக்கு வேறு ஓர் இடத்
இன்று அலுவல் இருப்பத
உங்களிடம் பிரியாவிடை
றுக் கொள்ளுகிறேன்."

[நீண்ட கைதட்டல். தலை
இளமுருகனுர் புறப்படுகி
றுர். கூட்டமும் எழுகின்றது
செயலாளர் தணிகை அர
வேகமாகச் சென்று மேடை
யில் ஏறி, அவையை நோக்

"தலைவரவர்களே, பெரி
களே, தாய்மார்களே! இ
இரண்டே விநாடிகளில்
கடமையை முடித்துக்கொ
கிறேன். அருள் கூர்ந்து
அமருங்கள். இறுதியாக
கூறவேண்டியது என் கட
யாகும். ஏன்? 'எந்ந
கொன்றுர்க்கும் உய்வுண்
உய்வில்லை, செய்ந்நன்றி செ
மகற்கு" என்பது திருவ
வன் வாக்கு அல்லவா?.....

(அடுத்த பக்கம் பார்க்க

ம் பக்கத் தொடர்ச்சி)

மிழ்மணி எழுந்து, இசைச்
வத்தைப் பார்க்கிருன்.
கார்ந்திருந்த இசைச்
வமும் எழுகின்ருன்.]
சைச் செல்வம்! போதும்
ஆண்டுவிழா, புறப்படு!'
, மணி! இதோ முடிந்து
ந்த, போகலாம்.'
, சரி. நீ இருந்து வா,
பாகிறேன்.'
ல்லை. நில் அப்பா,
நானும் வந்து விட்

ருவரும் வெளியே வரு
னர்]
ன, இசைச் செல்வம்!
த என்ன சொல்கிருய்?'
ால்வதற்கு என்ன இருக்
மணி, உன் வாய்க்குச்
தான் போடவேண்டும்.'
ரில் 'சில்' என்ற
சி ஏற்பட்டது. கண்
தன், என் அருமை
புன்முறுவல் பூத்த முகத்
எதிரே நின்று கொண்டி
. அவளுடைய அன்
என் தோளைத் தீண்டிக்
ருந்தது.
ங்காலம் மணி நாலு
கிறது. காலம் ரவே
இல்லே இண்ணேன்.
கிட்டே சக்கரை சக்
ண்ணு, பிதற்றிஞ சக்
என்ஞ, ஊட்டுக்குத்
ந்துடுமா? நல்லா,
லீவு விட்டாலும் விட்
ஞக் காண்றதே ஓங்க
ப்போச்சே! கடையே
ன், எழுந்திரிச்சி சீக்கிர
ாயி சக்கரை வாங்கி
சூடா காப்பி போட்
ன்."

வ என் துணைவி
வை! அட, ஆபத்தே!
நான் கண்ட காட்சி
கனவா?

# சிந்தனை அலைகள்

## எதிர்பார்த்தோம்! ஏமாந்தோம்!

கொங்கு நாட்டிற் கூடிடும் தேச பக்தர்கள், தமிழ்நாடு, டில்லி நோக்கித் தெண்டனிட வேண்டிய நிலையில் இன்று உள்ளதை எண்ணிப் பார்த்து, இந்த அடிமை நிலை தீர்ந்து, அது இன்பப் புது வாழ்வு வாழ்வதற்கான திட்டங்கள் தீட்டுவர் என்று எதிர் பார்த்தோம்; ஆனல் ஏமாந்தோம். அத்தகைய திட்டங்கள் ஏதும் அங்கு தீட்டப்படவில்லை. கோவை மாநாடு கூடிற்று; கலைந்தது. 'தேசியத்' தமிழர்கள் திரண்டனர்—பிரிந்தனர். காமராஜர் எழுந்தார் — பேசினர்— அமர்ந்தார். வளைவு மீசை சிவஞானமும் கல்வி அமைச்சர் அவினசியாரும் தத்தம் சொல் விருந்து வழங்கினர். தோழர் சி. பி. சுப்பையா வரவேற்க, அம்புஜம்மாள் கொடியேற்ற, ஓமந்தூரார் மக்கள் கடமை பற்றி "இதோபதேசம்" புரிய, ஆச்சாரியார் காமராஜரை நம்புங்கள் என்று தந்தி அடிக்க, அதை ஒருவர் வாசிக்க, "என்ன அருமை! என்ன அருமை" என்று சிலர் நாவசைக்க மாநாடு இரண்டு நாட்கள் ஓயாது நடந்து இறுதியில் ஓய்ந்து முடிந்துவிட்டது.

ஏழு ஆண்டுகளுக்குப் பின் தமிழ் மாகாண காங்கிரஸ் கூடிற்று. வெள்ளையர் ஆட்சி தொலைந்தபின் முதன் முறையாகக் கூடிற்று. சர்ச்சிலிசம் கோலோச்சிய இடத்தில் வடநாட்டுப் பனியா ஏகாதிபத்தியம் நுழைந்துவிட்ட பிறகு, இந்தப் புது ஏகாதிபத்தியத்தை, புத்தம் புதியதோர் போர் முறை கொண்டு, எதிர்த்து முறியடிக்க வேண்டிய தருணத்தில் கோவையில் கூடிற்று. கூடிய மாநாடு கூடியவண்ணமே கலைந்தது— திட்டங்கள் தீட்டாமல்! தென்னுட்டிற்கு மீட்சி ஏதும் தேடாமல்! திராவிடத்தைச் சிறைக் கைதி என ஆட்டிப் படைக்கும் வடநாட்டு வல்லரசை எதிர்த்து, போர்க்கொடி உயர்த்தாமல்! ஆங்கிலேயரிடமிருந்து 'இந்தியர்' அனைவரும் தட்டிப் பறித்த விடுதலை இன்பத்தை தென்னுட்டவர் நுகரமுடியாது போயிற்றே என்பதை உணர்ந்து உரிமை முழக்கம் புரியாமல்!

கோவை காங்கிரஸ் மாநாடு, வடநாட்டுத் தாக்கீதுகள் அடுத்தடுத்து தென்னுட்டை மடக்கி வந்த நேரத்தில் கூடிற்று. என்றாலும் அது திராவிடத்தின் விடுதலைப் போருக்கு வழி வகுக்கவில்லை.

ஏழு ஆண்டுகளுக்குப் பின் மாநாடு கூடிற்று என்றோமே, இந்த ஏழு ஆண்டுகள் என்ன சாமானியமா! காங்கிரஸ் தமிழர்களின் பரிபூரண அன்பை காணிக்கையாய்ப் பெற்றிருந்த காமராஜர் கூட்டத்தை சதிகாரக் கும்பல் என்று வடநாட்டு மாமுனிகள் தூற்றியது இந்தக் காலத்தில்தான்! தமிழர்கள் வேண்டாம் என்று வெறுத்துத் தள்ளப்பட்டவர்க்கு, வடநாடு,

கவர்னர் ஜெனரல் எனும் பட்டம் கொடுத்து தமிழ்நாட்டை அவமானப்படுத்தியதும் இந்தக் காலத்தில்தான். தமிழர்கள் சற்றேனும் விரும்பாத ஒருவரை தமிழர் நாட்டில் முதலமைச்சராக நிறுத்திவிட வார்தா மடாலயம் சூழ்ச்சி புரிந்ததும் இந்தக் காலத்தில்தான். பலமான மத்திய சர்க்கார் என்று சொல்லிச் சொல்லி தென்னாட்டின் உரிமை நலங்கள் யாவும் பறிக்கப்பட்டதும் இந்தக் காலத்திலேதான். உணவுப் பிரச்சினையா, உடைப் பிரச்சினையா, அல்லது அகதிகளைப் பற்றிய பிரச்சினையா எதுவாய் இருந்தாலும் சரி, வடநாடு கிழித்த கோட்டைத் தென்னாடு தாண்டக்கூடாது என்ற வரைமுறை ஏற்பட்டதும் இந்தக்காலத்திலேதான். தென்னாட்டுத் தமிழ் மறவர் கூட்டம் உரிமையோடு நிமிர்ந்து நின்று வாழ்வதா அன்றி தலை குனிந்து நெஞ்சு நைந்து, குறுகிக் கூனிச் சாவதா என்ற பிரச்சினை மூண்டெழுந்த காலமும் இதுவேதான். இத்தகைய காலத்தில் கூடிய கோவை மாநாடு தென்னாட்டுத் தனியாட்சி அல்லது சுதந்தரத் தமிழன் என்ற இலட்சியத்தை முன் வைத்துப் போர் முரசு கொட்டியிருக்கவேண்டும். தவறிற்று. கருத்தின்றி, கூடிக் கலையும் மாநாடுகளின் வரிசையில் கோவை மாநாடும் இடம் பெற்றுவிட்டது. இது உண்மையில் வருத்தத்திற்குரியதே. தென்னாட்டிற்குக் கோவை வழிகாட்டும் என எண்ணினோம், ஏமாந்தோம். இதுவும் வருத்தத்திற்குரியதே.

வருத்தம் இருக்கட்டும் ஒருபுறம், காங்கிரஸ் தமிழர்கள் இனி என்ன செய்யப் போகிறார்கள் என்பதுதான் நமக்குத் தெரிய வேண்டும். அவர்கள் முன் உள்ளவை இரண்டே வழிகள். ஒன்று, காங்கிரசிற்குள்ளேயே இருந்து, வட நாட்டுக் [illegible] போராடி தென்னாட்டைத் தனியரசாக்குவது. அது முடியாவிட்டால் காங்கிரசை விட்டு வெளியேறி, திராவிடநாடு திராவிடருக்கே என்ற இலட்சிய கீதத்தை இசைத்துவரும் திராவிடர் கழகத்துடன் கூட்டு முன்னணி அமைப்பது. உள்ள வழிகள் இவை இரண்டுதான். இவற்றில் எதைப் பின்பற்ற எண்ணம் காங்கிரஸ் தமிழருக்கு? உள்ளந் திறந்து பேசுவாரா உண்மையை?

## அடே அப்பா! கொண்டாடினார்கள்!

திருப்பூர் குமரன், தியாகத்தின் சின்னம். தடியடி தன் தலையைத் தூளாக்கியபோதும் நெஞ்சங் கலங்காது நிமிர்ந்து நின்று போராடிய இளைஞர் ஏறு. இன்னல் பல்லாயிரம் என்னை வந்தடையினும் கையில் ஏந்திய கொடியினைக் கைவிடேன் என்று சூளுரைத்த தமிழ் மறவன். அவன் கொட்டிய குருதியில் வளர்ந்தது தமிழ் நாட்டுத் தேசிய இயக்கம். ஏகாதிபத்தியம் எனும் பயங்கரப் பலிபீடத்தின் முன் அவன் பரிமாறிய பச்சை ரத்தம்தான் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் எனும் மாட மாளிகையாயிற்று. அவனுடைய முறுக்கேறிய நரம்புகள் விளைத்த போராட்டத்தில் புது ஜீவன் பெற்றது காங்கிரஸ். ஆனால் அவனை மறந்தது. அவன் வீரத் தியாகத்தை மறந்தது. கொடிக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்தவன் திருப் பெயரை மறந்தது. ஒன்று இரண்டா பதிமூன்று ஆண்டுகள் மறந்திருந்தது. இந்த ஆண்டுதான் அங்கும் இங்குமாக சிற்சில காங்கிரஸ் தமிழர்கள்-இன உணர்ச்சி படைத்தவர்கள்—குமரன் மறைந்த திருநாளைக் கொண்டாடியிருக்கின்றனர்.

கப்பலோட்டிய தமிழனின் திறம் உணர மறுத்தவர்கள்—
தென்னாட்டில் தேசிய வித்
தலைவர் பெரியாரை மற
கள்—அவரோடு உடனி
போராடிய பெருவீரர்கள்
வி. க. டாக்டர் நாயுடு இ
யும் பழித்தவர்கள் தி
குமரனையும் இதுகாறும்
திருந்ததில் வியப்பேது
இன்றேனும் விழித்தெ
அவன் புகழ்பரப்ப மு
னரே, இதுதான் வியத்த
யது. வடநாட்டுத் தலைவ
"லாலி" பாடிப் பாடி ப
பட்டுப் போன தமிழ்
தேசியக் குரல்கள் தென்ன
திருவிளக்குகளின் பே
யைப் போற்றிப் புகழ்வது
மேதன்ன அவ்வளவு எ
காரியமா? எவ்வளவு
உரமும் நேர்மைத் தி
வேண்டும் இதற்கு?

வழக்கம்போல் இந்த
டும் மறந்து விடாமல் கு
நினைவில் கொண்டு தி
கொண்டாடிய கதர் ச
நண்பர்கட்கெல்லாம் நம்ப
டும் நன்றியும். வாழ்க கு
திருப்பெயர்! வளர்க
புகழ்!

---

## 'திராவிடன்' பொங்கல் மலர்

[விலை ரூ 1-0-0. இடம்
சுங்குராம செட்டித்
சென்னை.]

பெரியார் உருவம் பெ
அட்டைப் படம்; உள்ளே
தும் 'பெரியாரின் பிரதிபி
ஒரு தாள் தள்ளியதும் சிகப்
டம் பொறித்த கருப்புக் கொ
கம்பீரத் தோற்றம்; அதை
தாளமுத்து நடராசனின்
மண்டபப் படம். பிறகு பெ
பாரதிதாசன், அண்ணா ஆ
ரின் கைவண்ணம் அதற்க
வரிசை வரிசையாக நண்ப
எழுத்தோவியங்கள்.
இடையே இயக்கத் தோ
தொண்டர்கள் தலைவர்கள்
கள்—இது 'திராவிடன்' பெ
மலர். இதில் சிறந்த க
கட்டுரைகள் கவிதைகள் எ
உண்டு என்பதைச் சொ
வேண்டுமா?

ம் பக்கத் தொடர்ச்சி)

ம் கொடுஞ் செயலும் கும் இந்த வாசகத்தை ய பேணு முனே முன்! நாயக"மே! நீ இவ்வள தாழ்ந்துவிட்டாய்' என்ப நாம் வேறென்ன சொல் , இந்தப் பத்திரிகையின் பத்திற்குரிய இப் போக்கு .

* * *

யூனிஸ்ட் தம்பீ, கேள், வார்த்தை. மலையுடன் ுல் மண்டைதான் உடை மலை உடைபடாது. நினை கட்டும்.

ர்ந்து பார்; நேரிய வழி கோணல் பாதையில் து, குறுக்கும் நெடுக்கும் து, நீ சென்று தீரவேண் இலட்சிய பூமி'யை மறந்து தே.

ாவிடர் கழகத்துடன் மல் நிற்காதே. நீ செல்ல டிய பாதை இது எனக் ும் வழிகாட்டி அது. நீ க்கு நடக்கவிருக்கும் புரட் ாதையை முன் கூட்டியே பணிட்டுத் தரும் முன்ன படையினரின் முகாம் நீ சறுக்கி விழக்கூடிய ம் பெரும் பள்ளங்களை , நீ கண்டு நடுங்கக்கூடிய மாண்டமான' துவக்கப் களை முடித்து, உன் பணி எளிதாக்குகிறது அது. அழித்துவிடமுனையாதே. க்கவும் உன்னால் ஆகாது. அது அழிந்துவிட்டா உனக்கு ஆபத்து அதிக ம்.

வவொரு மனித உள்ளத் ம் தட்டி எழுப்பி முன் றமுறச் செய்யும் புது உலக சக்திக்குத்தான் இந்த நாட்டில் திராவிடர் கழகம் என்று பெயர். அந்த சக்தி நாடு முழுவதும் பரவுகிறது என்றால் உண்மை பரவுகிறது என்று தானே பொருள்! அது கண்டு உனக்கேன் அச்சம்? 'ஜனநாயக'த் தம்பீ, அச்சம் வீடு. புரட்சிப் பண் பாடு. புது உலகம் போ. புத்துலகப் பாதையைத் தெளிவுறுத்தும் ஒளி விளக்கு **திராவிடர் கழகம்.** அந்த விளக்கொளி உனக்கும் பயன்படும். விட்டில் பூச்சி அல்லவே நீ! பின் ஏன் பயப்படுகிறாய் அப் புத்தொளி கண்டு? போ தைரியமாக. **விளக்கொளி உன்னை வீழ்த்தாது; உனக்கு வழிகாட்டும்.**

—


K. R. ராமசாமியின்

## கிருஷ்ணன் நாடக சபா.

★

திருச்சி, ரெத்தினவேலுத் தேவர் ஹாலில்

27-1-48, செவ்வாய் முதல் தினசரி.

★

அற்புதமாய் அமைந்திருக்கும் சிற்பக்கலை அரங்கில் புதுமையான மேடை அமைப்புடன், புதிய நாடகம்.

# "மணமகள்"

கதை :

S. K. சாமி

★

பாடல்கள் : நாரா. நாச்சியப்பன்

புதன், ஞாயிறு : மாலை 6-30—மற்ற நாட்கள் இரவு 9-30

திங்கள் நாடகமில்லை.

டிக்கட் : ரூ. 3-0-0, 2-0-0, 1-3-0, 0-12-0, 0-6-0.

# போர்வாள்

24—1—48 சனிக்கிழமை

## வர இருக்கும் போராட்டம்

**"படேல் என்னும் உலகத்தையே ஆளவேண்டுமென்ற பாசிச எண்ணம். இந்தியாவைக் குஜராத்திகள் ஒருவர்தான் ஆளவேண்டும்; மற்றவர்கள் எல்லாம் தலைசாய்க்க வேண்டும் என்பது அவர் கருத்து.**

**"இந்த ஹிட்லரிசத்தை ஒழிக்க வேண்டியது ஒவ்வொரு சோஷியலிஸ்டின் கடமை; ஒவ்வொரு கம்யூனிஸ்டின் கடமை; ஒவ்வொரு தேசிய வாதியின் கடமை; எல்லாக் கட்சிகளுடைய கடமை.**

**"இனி, பெரிய போராட்டம் எழப்போகிறது. நமக்குள்ளேயா? இல்லை. வடநாட்டுப் பாசிசத்தோடு. தென்னாட்டினர் அனைவரும்—தமிழ்க் குருதி தம் உடலில் ஓடப் பெற்றோர் அனைவரும் இப் பாசிசத்தை வீழ்த்துதற்கு முனைதல் வேண்டும்."**

—அறிஞர் திரு. வி. க.

அன்றோர் நாள் கடலெனத் திரண்டு குழுமிய திராவிடர் பட்டாளத்தின் முன்னே கடலூரில் ஆற்றிய வீர உரையின் ஒரு பகுதி இது.

அந்த உரை வீர உரை மட்டுமல்ல; தமிழ்த் தென்றலிற் படிந்து படிந்து வந்த தீர உரை மட்டுமல்ல; உண்மைநிலையைஉணர்ச்சி பெற விளக்கிக் காட்டிய பாசறைப் பேருரை மட்டுமல்ல; அவருடைய முப்பதாண்டு அரசியல் அநுபவம் என்னும் துலாக் கோலில் இன்றைய வடநாட்டுக் காங்கிரசை நிறுத்துப் பார்த்து அவர் எடுத்துக் கொடுத்த தீர்ப்பு.

அந்தத் தீர்ப்பு மிக நேர்மையானது. நீதிக்கும் ஒழுங்கு முறைக்கும் தலைசாய்ப்பார் எவரையும் தன்பால் ஈர்க்கும் தன்மையது. தென்னாட்டின் நலிதீர்க்கும் மருந்து அது.

**"வடநாட்டுப் பாசிசத்திற்கெல்லாம் தலைவர் யார் தெரியுமா? படேல் படேல் படேல் என்று அறைகூவிச் சொல்கிறேன்"** என்று திரு. வி. க. அன்று கூறினாரே, அது முழு உண்மை.

படேல் பாசிசத்தின் தூதுவர்; வழி காட்டி; முன்னோடும் பிள்ளை.

படேல், எதேச்சாதிகாரம் என்னும் எரிமலைமீது அமர்ந்துகொண்டு ஹிட்லரிசம் எனும் காவியத்தின் சுவை நலம் பருகிக் கிடக்கும் இரும்பு மனிதர்.

படேல், ஏகாதிபத்திய தத்துவங்கள் எத்தனை உண்டோ புவிமீதில் அவை அத்தனையையும் தன் சட்டைப் பையில் தாங்கிச் செல்லும் தீரமும் துணிவும் படைத்த 'சுந்தர புருஷர்.'

படேல் என்றால் ஆதிக்க வாதம் என்று பொருள்; சர்வாதிகாரப் போக்கு என்று பொருள்; மக்கள் ஆட்சியை மட்டந் தட்ட எண்ணும் மமதையாளரின் தன்மை என்று பொருள்.

படேல் ஒரு மனிதர் அல்ல—ஒரு கொள்கை. பணக் கோட்டைகளுக்கு 'ஆளவந்தார்' எனும் சுற்றுச் சுவர் எழுப்பி, பிரசாரம் எனும் பீரங்கிகளை நாலா புறமும் நிறுத்தி வைத்து,

கட்சி அமைப்பு எ
வெடி குண்டுகளை அவற்
நிரப்பிவைத்து, பாட்
களின் பட்டாளம் அ
கோட்டைகளுக்கு ஆ
வேட்டு வைப்பதை ஓ
துக் கட்டிடும்
கொள்கை.

முதலாளித்வ பலி
தில் பாட்டாளி மக்க
சாய்க்கும் கொடுமை
ஹிட்லரிசம் என்ற
ருண்டு; பாசிசம் எ
பெயருண்டு; புரோகி
வம் என்ற பெயரு
படேலிசம் என்ற பெ
உண்டு.

வட நாட்டுக் காங்கி
யும் டில்லி சர்க்கா
ஆட்டிப் படைக்கும் சூ
ரக் கயிறு படேலிடம் இ
கிறது; படேலிடம்
இருக்கிறது.

இந்த உண்மைகள்
ராலும் மறுக்க மு
தவை.

மறுக்கும் எண்ண
நெஞ்சுத் துணிவோ
ருக்கேனும் இருக்குமா
அவர்கள், ஆகஸ்டு 15க்
பின் சர்தார் படேல் இ
வரும் இடி முழக்கங்க
சற்றே செவி மடுக்கட்
அவற்றின் உட்பொ
ஓரளவேனும் உணரட்
உணர்ந்தபின் உரை
டும் நாம் கூறுவது
தானா அல்லவா என்ப

இந்தியா அரசியல்
தலை பெற்ற பிறகு, ப
பேசும் பேச்சும், அ
போகும் போக்கும், உ
முழக்கம் புரிவோர் எ
யினும் சரி அவர்கள்
அவர் காட்டும் பொச்
பும் பகை புணர்ச்
கொஞ்சமல்ல!

மொழிவாரி மாகாணப் ரிவினையா—பேசாதே!

உழைப்பவர் உடலம் டுங்கிக் கிடக்கிறதா—கிட கட்டுமே, கிடந்தால் ன்ன?

புரட்சிப் பொறி கிளம் ம் என்ற பயமா—அடக்க ழி தெரியும் எனக்கு.

புனல் சொரிந்த கண்க ல் தீப்பொறி பிறக்கவும் டும் என்கிறீர்களா, றைக்தோட்டம் உண்டு, தில் கூற.

கம்யூனிஸ்டுகள் கிளர்ச்சி சய்தால் பிடித்துத் தள்ளு ண்டில் அவர்களை.

சோஷியலிஸ்டுகளும் தே வழியில் செல்வதா ல் போகட்டும் அவர்க ம், காங்கிரசின் கதவைத் றந்துவிடு. வெளியேறி டட்டும்,

உள்ளிருந்தே கிளர்ச்சி சய்வோம் என்கிறார்களா போகும் வழி இது எனச் டிக் காட்டும் பலகை பத் தொங்கவிடு அவர் ர் முன்னால்!

மன்னன் படேல் பகர்ந்த ணி மொழிகளிற் சில வை.

ஹிந்துஸ்தான் என்ற ப் பகுதியை மிக வேக கப் பாசிசப் படுகுழிக்கு ழைத்துச் செல்கிறார் டல் என்பதற்கு இச் சாற்களினும் வலிய ன்று வேறு தேவை லை,

ம்மை—நம் நாட்டை— டு மக்களை—மக்கள் ழ்வை நோக்கி வரும் பத்து எவ்வளவு பயங்கர னது என்பதை விளக்கவும் இச்சொற்களே போதும்,

டாடா-பிர்லா-டால்மியா அச்சு ஒரு புறமும் படேலிசத்தின் அரசியல் அச்சு மறுபுறமும் கொண்ட இடுக்கித் தாக்குதலில் சிக்கிக் கொண்டுவிட்டது திராவிடம். இந்த இடுக்கித் தாக்குதலின் பெயர்தான் வடநாட்டுப் பாசிசம்.

திரு. வி. க. திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருப்பது போல இந்த வடநாட்டுப் பாசிசத்தை ஒழித்துக் கட்டுவதற்காக விரைவில் ஒரு போராட்டம் தென்னாட்டில் மூண்டெழப் போகிறது என்பதில் ஐயமில்லை.

அத்தகைய போராட்டம் குமுறி எழும்போது தென்னாட்டில் உள்ள முற்போக்குச் சக்திகள் அத்தனையும் ஒன்று திரண்டு இந்தப் பிற்போக்குச் சக்தியை. வீழ்த்தியே தீருவர் என்பதிலும் ஐயமில்லை.

வீழ்த்தப்பட்ட இடத்தில் சுதந்தர சோஷலிசத் திராவிடக் குடியரசு வெற்றி முரசு கொட்டிய வண்ணம் ஓங்கி வளர்ந்து ஒளி வீசும் என்பதிற் கொஞ்சமும் ஐயமில்லை.

பாசிசத்தை—படேலிசத்தை-தென்னாட்டை வீழ்த்த எண்ணும் பகை நினைப்பை வீழ்த்தவும், நாம் இருக்கும் திராவிடம் நமது என்பதை நிலை நாட்டவும், வர இருக்கும் போராட்டம் ஒரு தாளமுத்தை ஒரு நடராசனை ருசி பார்ப்பதோடு நின்றுவிடாது; எண்ணற்ற தாளமுத்துகளை நடராசன்களைக் கூவி அழைப்பதாகவே இருக்கும். தமிழகம் அதற்குத் தயாராய் இருக்கட்டும்.

---


**போர்வாள்**

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனிப்படி | 0-1-6 | 0-2-0 |
| ஆண்டுத் தொகை | 5-0-0 | 6-8-0 |

147, பவழக்காரத் தெரு, சென்னை.



## திராவிடஸ்தான் வேண்டாமா?

இன்பத் திராவிடம் தனி நாடு என்கிறோம் நாம். அல்ல என்கிறார் கம்யுனிஸ்ட். அவர் கருத்துரையும் அதற்கு இளஞ்செழியன் தரும் மறுப்புரையும் கொண்ட நூல்.

விலை ரு. 0-8-0
தபாலில் 0-9-0

**பகுத்தறிவுப் பாசறை**

147, பவழக்காரத் தெரு, :: சென்னை 1.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

தகைய பொருளற்ற தாக்குதல்களை நிகழ்த்தினுல், அது அவர்கள் பண்பு என்று சொல்லி அமைதி பெறலாம். ஆனுல் கம்யூனிஸ்டுகள்—எதனையும் அலசிப் பார்த்து ஆராய்ந்தறியும் நோக்கும் போக்கும் உடையவர்கள் இப்படிச் செய்தால் நாம் வருந்தாமல் வேறென்ன செய்ய முடியும்?

அவர்கள் தாக்குதலின் தன்மைக்கு இதோ ஓர் எடுத்துக் காட்டு.

"ஜனநாயகம்"—"ஜனசக்தி"யின் தம்பி—கம்யூனிஸ்டுகளின் புதுமாத வெளியீடு—சென்ற இதழில் ஜமீன் இனும் ஒழிப்பும் திராவிடர் கழகமும் என்ற தலைப்பில் ஓர் கட்டுரை வெளியிட்டுள்ளது. அதில் நம் மீது ஆறு அதிசயமான குற்றச் சாட்டுகளைச் சுமத்துகிறது அப் பத்திரிகை.

1. திராவிடர் கழகம் இனும்கள் ஒழிய வேண்டும் என்பதில் அக்கரை காட்டுகிறதே தவிர ஜமீன்கள் ஒழிப்பில் அதிகக் கவலை செலுத்தவில்லை.

2. ஜமீன்கள் ஒழிக்கப் படுவது கண்டு அது ஆத்திரமும் வருத்தமும் கொள்கிறது.

3. பார்ப்பனர் அல்லாதார் என்ற அடிப்படையில் ஜமீன்தார்களுக்கு அதிக நஷ்ட ஈடு கொடுக்க வேண்டு மென்று திராவிடர் கழகத் தலைவர்களும் "விடுதலை"யும் வாதாடுகின்றனர்.

4. நிலச்சுவான்தார்கள், ஜமீந்தார்கள், முதலாளிகள், கள்ள மார்க்கெட் வியாபாரிகள் ஆகியோர் திராவிடர் கழகத்தின் 'ஆப்த நண்பர்கள்! (!) திராவிடர் என்ற பெயரால் நேரிடையாகவும் மறைமுகமாகவும் அவர்கட்கு உதவுவது திராவிடர் கழகத்தின் முடிவான நோக்கம்.

5. இனும் ஜமீன் ஒழிப்பை, தி. க. ஆதரிப்பதாகக் 'காட்டிக் கொள்வது' காங்கிரஸ் மந்திரி சபையைத் தாக்கி அதை இழிவு படுத்துவதற்காகவே அன்றி உண்மையிலேயே இனும்களை யும் ஜமீன்களையும் ஒழிப்பதற்கன்று.

6. அடிக்கும் உதைக்கும் சிறைக்கும் பயந்தவர்கள் திராவிடக் கழகத்தவர்.

முழுப்பொய்! புரட்டு! கற்பனை! இட்டுக் கட்டுதல்! உண்மைக்கு நேர்மாறு! என்ற இத்தகைய வார்த்தைகளைத்தான் திராவிடர் கழகத்தின் போக்கைக் கவனித்துவந்த நேர்மைப் பண்பினர் எவரும் அள்ளி வீசுவர் இக்குற்றச்சாட்டுகளின் மீது. வேண்டுமென்றே, திராவிடர் கழகத்தின்மீது கல் எறியவேண்டும் என்ற ஓரே நோக்கத்திற்காக, அதன் பெயர்மீது மாசு படியவேண்டும் என்ற கருத்தையே உள்ளத்தில் கொண்டு எழுதி இருந்தால் ஒழிய உண்மைக்கு நேர்மாறுன இத்தகைய பொருந்தாப் பொய்யுரைகள் எவர் பேனு முனையினின்றும் உருண்டிருக்க முடியாது.

குற்றச் சாட்டுகளைத்தான் பார்ப்போமே!

**1. திராவிடர் கழகம் இனும்கள் ஒழியவேண்டும் என்பதில் அக்கரை காட்டுகிறதே தவிர ஜமீன்கள் ஒழிப்பில் அதிகக் கவலை காட்டவில்லை.**

என்ன நெஞ்சறிந்த பொய்!

"அக்கிரமம் என்ற போதிலும் ஆங்கிலேயர் ஆதரவு இருக்கிறது என்ற ஓரே காரணத்தினுல், வசூல் அதிகாரிகள் (ஜமீந்தார்களாக) உரிமையாளர்களாக உலவி வந்தனர் இது வரை. இனி அந்த நிலை இருத்தலாகாது. ஆங்கிலேயர் ஆதிக்கம் தொலைந்ததும் அவர்களுடன் கூடவே வந்த பல அநீதிகளும் அவர்களுடன் கூடவே போய்விட்டது போல, இந்த (ஜமீன்) அநீதியும் போகவேண்டியதே."

'போர்வாள்', 27-9-47 ஜமீன் சாய்கிறது என்ற தலைப்புள்ள கட்டுரையில் தீட்டி வாசகங்கள் இவை.

"ஜமீந்தார்களே! வீண் சலசலப்பு வேண்டாம். உங்கள் காலம் மலையேறி விட்டது. ஜமீந்தாரி ஒழிப்பு மசோதாவுக்குத் தலை வணங்குங்கள். நீங்கள் ஒழியவேண்டும் என்பதில் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளுக்கிடையே கருத்து வேற்றுமையே கிடையாது. ஆகவே உங்கள் சலசலப்பு பலன்தராது என்பதை உறுதியாக உணர்ந்துகொள்ளுங்கள்."

6—9—47 'போர்வாள்' இதழில் உள்ளது இது.

இந்தக் கருத்துரைகளின் பொருள் என்ன? ஜமீன்த ஆதரிப்பா?

"ஜெமீன்தார்கள், பார்ப்பனரல்லாதார் என்ற காரணத்திற்காக ஜெமீன் ஒழிப்பு கூடாது என்று திராவிடர் கழகம் கூற வில்லை. ஜெமீன் முறை கொடியது—எனவே ஒழியத்தான் வேண்டும்—அந்த முறை ஒழிவதால் சில பார்ப்பனரல்லாத மேட்டுக் குடியினரின் வாழ்க்கை ஜொலிப்பு கெட்டுவிட்டால் கேடொன்றில்லை—ஏழை வாழ்வான்-அதுவே எமது குறிக்கோள்—ஆகவே ஜெமீன் ஒழிப்பை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று திராவிடர் கழகம் கூறுகிறது."

—"திராவிட நாடு" 26-10

''ஜமீன்கள் முதலாளித்வத்
ன் நடனமேடை என்றால்,
னாம்கள் புரோகிதத்வத்தின்
ளர்ப்புச் சாலை. ஜமீன்கள்
ணக் குண்டுகளால் நிரப்பப்
ட்ட பாசறை என்றால், இனாம்
ள் புராணக் கட்டுகளில் மூழ்
ய தெப்பம். ஜமீன்களில் பவனி
ருவன வெள்ளியும் தங்கமும்
வரமு, வைடூரியமும் என்றால்,
னாம்களில் அன்ன நடை
டப்பன தர்ப்பைப் புல்லும்
ாகவத இராமாயணமும்.
ங்கே இருப்பது ஆணவம்.
ங்கே வாழ்வது சூழ்ச்சி.
ங்கே மிளிர்வது ஆதிக்க வெறி.
ங்கே விளங்குவது ஏய்த்துப்
ழைத்தல். அங்குள்ள செங்
கால், ரூபா அணா பைசா.
ங்குள்ளதன் பெயரோ கிழிந்த
ழும் பஞ்சாங்கம். அதனால்
ளைவது அக்கிரமம். இதனால்
ர்வது அநீதி. அந்த அக்கிர
ம் தொலைவதே ஒழுங்கு என்
ல் இந்த அநீதி கொடிகட்டி
ழ்வது மட்டும் நேர்மையோ?
மீன்கள் இருப்பது உழவர்தம்
ரிமையைப் பறிப்பது போல்
து எனில், இனாம்கள் நடமாடு
து மட்டும் பயிரிடும் பாட்டா
க்கு ஆனந்த கீதமா? ஜமீன்
் தொலையவேண்டும்—அட்டி
ல்லை நமக்கு. ஆனால் ஜமீன்
் சரியும் முன்னால் இனாம்
ம் ஒழிதல் வேண்டும்.
னாம்கள் ஒழியத்தான் வேண்
. ஒழிந்தால் மட்டுமே உழ
கள் உரிமையோடு உலவ
டியும் ஊரில். தஞ்சாவூரில்
ருடுவது குற்றம் என்றால்
ருச்சினாப்பள்ளியில் திருடுவ
ம் குற்றமே. ஜமீன்களில்
வர்கள் படுவது பெருந்
ொல்லை என்றால் இனாம்களில்
வதும் துன்பமே.''

'போர்வாள்' தலையங்கம்
18—10—47

இனாம் ஒழிப்பைப் போலவே ஜமீன் ஒழிப்பையும் திராவிடர் கழகம் அதிதீவிரமாக ஆதரித்தது என்று காட்ட இன்னும் என்ன ஆதாரம் தேவை? கம்யூனிஸ்டின் கூற்று எவ்வளவு பொய்ம்மை நிறைந்தது என்பதைக் காட்டத்தான் வேறு எடுத்துக்காட்டு தேவையா?

இனாம் — ஜமீன் இரண்டும் ஒழிக என்றுதான் நாம் சொல்லி வந்தோமே தவிர இனாம்கள் மட்டும் ஒழிந்து, ஜமீன்கள் இருக்கவேண்டும் என்று எந்நாளும் சொன்னதில்லை.

ஆனால் ஒன்று. ஜமீன் ஒழிப்பிற்கு எதிர்ப்பு இல்லை—ஜமீந்தார்கள் எதிர்த்தது தவிர. ஆனால் இனாம் ஒழிப்பிற்கு, காங்கிரசிலும் வெளியிலும் பலத்த எதிர்ப்பு இருந்தது. இனாம் ஒழிப்பு ஆரிய வட்டாரத்தை அசைக்கிறது என்பது தெரிந்ததும் அக்கிரகாரம் அவதிக்குரல் எழுப்பத் தொடங்கிற்று. சர் அல்லாடிகளும் டி. ஆர். வி. சாஸ்திரிகளும் பாஷ்யம்களும் வரதாச்சாரிகளும் வைத்தியநாதய்யர்களும் மற்ற பல கனபாடிகளும் சட்டப் புத்தகங்களையும் சாஸ்திர சம்பிரதாயங்களையும் எடுத்து நீட்டி இனாம் ஒழிப்பை மடக்கப் பார்த்தனர். அவர்கள் கூச்சல் அதிகமாக ஆக அதை எதிர்த்துப் பேசவேண்டிய பொறுப்பு தி. கழகத்திற்கு ஏற்பட்டது. கம்யூனிஸ்டுகளுக்குத்தான் "அந்தச் சிறு வட்டாரத்திடம்" கொஞ்சம் பாசம் அதிகமாயிற்றே! ஆகவே அவர்கள் ஜமீன்களை எதிர்க்கத் துணிந்த அளவு இனாம்களை எதிர்க்கவில்லை. இது நம் பொறுப்பை மேலும் அதிகமாக்கிற்று. நம் இனாம் ஒழிப்புப் பிரசாரம் தமிழகத்தின் மூலை முடுக்குகளிலும் பட்டி தொட்டிகளிலும் கூட பரவிப் பாய்ந்தது. நாம் இனாம் ஒழிப்புப் பிரசாரம் செய்த அளவிற்கு ஜமீன் ஒழிப்புப் பிரசாரம் செய்யவில்லை என்பது உண்மை. ஆனால் அதற்குக் காரணம் ஜமீன்களிடம் பற்றோ பாசமோ நமக்கு இருந்தது என்பதல்ல. ஜமீன் ஒழிப்புக்கு எதிர்ப்பு இல்லை, ஆகவே எவர்க்கும் பதில் சொல்லவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்பதுதான்.

**குற்றச்சாட்டு 2. ஜமீன்கள் ஒழிக்கப்படுவது கண்டு தி. கழகம் ஆத்திரமும் வருத்தமும் கொள்கிறது.**

முதலாளித்வம் மெல்ல மெல்ல மனித சமுதாயத்திலிருந்து விடைபெறுவது கண்டு கம்யூனிஸ்டுகள் ஆத்திரமும் வருத்தமும் கொள்கிறார்கள் என்று சொல்வது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மைதான் இதுவும்.

**குற்றச்சாட்டு 3. பார்ப்பனர் அல்லாதார் என்ற அடிப்படையில் ஜமீந்தார்களுக்கு அதிக நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று வாதாடுகின்றனர் திராவிடர் கழகத் தலைவர்களும் "விடுதலை"யும்.**

இதற்குப் பதில் நாம் சொல்லப்போவதில்லை. இதோ "விடுதலை"யையே பேச வைக்கிறோம்:

"இம் மாகாணத்தில் ஜமீந்தார்கள் ஆண்டுதோறும் வருமானமாகப் பெறுவது 4 கோடி ரூபாய். ஆனால் ஆட்சியாளருக்குப் "பேஷ்குஷ்" ஆகக் கொடுக்கும் தொகையோ 47 லட்சம் தான். மிச்சப் பணமெல்லாம் சொந்தத்திற்கு! இது இன்று நேற்றல்ல; 1802-ம் ஆண்டு முதல்.

" இவ்வளவு **பெருங் கொள்ளை** அடித்த ஜமீந்தார்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப் போகிறார்களாம் மசோதாவின்படி! அதுவும் 10 கோடி ரூபாய்! **அக்கிரமம்.**

"சர்க்கார் சார்பில் வரி வசூல் செய்து பெரும் பகுதியைத்

தாங்களே வைத்துக்கொண்டு மிகச் சிறு பகுதியை சர்க்காருக்குக் கொடுத்துவந்த ஒரு கூட்டத்தாருக்கு நஷ்ட ஈடு கொடுப்பதென்றால், இந்த மசோதா சட்டமாகிய பிறகு சாரதா சட்டத்தைப்போலப் பயனற்றதாகத்தான் கிடக்கும் என்பது நம் முடிவு.'' —விடுதலை 29-9-47.

**நஷ்ட ஈடே கொடுக்கக்கூடாது** என்று இவ்வளவு கடுமையாக ''விடுதலை'' எழுதி இருக்கிறது. ஆனால் ''ஜன நாயகம்'' கூறுகிறது, **நஷ்ட ஈடு அதிகம் வேண்டுமென்று** ''விடுதலை'' வாதாடுவதாக! இவ் வண்ணம் உண்மையை அடியோடு மறைத்துக் கூறுதற்குரிய நெஞ்சுத் துணிவு ''ஜன நாயக''த்தின் பிறப்புரிமை போலும்!

**குற்றச்சாட்டு 4. நிலச்சுவான்தார்கள், ஜமீந்தார்கள், முதலாளிகள், கள்ள மார்க்கெட் வியாபாரிகள் ஆகியோர் திராவிடர் கழகத்தின் ஆப்த நண்பர்கள். திராவிடர் என்ற பெயரால் நேரிடையாகவும் மறைமுகமாகவும் அவர்கட்கு உதவுவது தி. கழகத்தின் முடிவான நோக்கம்.**

பூணை வர்க்கமும் எலி வர்க்கமும் 'ஆப்த' நண்பர்களானால், கீரியும் பாம்பும் இணை பிரியாத் தோழர்களானால், டாடாவும் பிர்லாவும் பாட்டாளி மக்களின் உண்மை நண்பர்களானால், ராஜா சர்களும் அழகப்பாக்களும் ஜீவானந்தங்களின் பிரிய நேசர்களானால், நிலச்சுவான்தார்கள் முதலாளிகள் ''கள்ள மார்க்கெட்''டுகள் இன்ன பிறர் திராவிடர் கழகத்தின் நண்பர்களாவர். அவையெல்லாம் நடவாத செயல் எனில் இதுவும் அத் தன்மைத்தே.

எந்த ''தேசீய'' காங்கிரஸ் பிர்லாக்களின் தாழ்வாரத்தில் தவழ்ந்து விளையாடுகிறதோ, எந்த தேசீய காங்கிரஸ் வடபாதி மங்கலங்களின் கைலாகு பெற்றுக் களித்துக் கூவுகிறதோ, எந்த தேசீய காங்கிரசில் குமார மங்கலங்களும் கோவை சண்முகங்களும் புன்னகை பூத்த முகத்துடனே பவனி வருகின்றனரோ, எந்த தேசீய காங்கிரஸ் கள்ள மார்க்கெட் கழுகுகளின் உறைவிடமாய்விட்டது என்று ஜெயப்பிரகாஷ் நாராயணர்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றனரோ, எந்த தேசீய காங்கிரசில் முதலாளி வர்க்கம் ஆதிக்க பீடத்தில் அமர்ந்து கோல் ஓச்சுகிறதோ அந்த தேசீய காங்கிரசை அல்லும் பகலும் போற்றித் துதிபாடும் கம்யூனிஸ்ட் பாட்டாளிகளின் மேடையாகிய தி. கழகத்தின்மீது இல்லாத பொய்யுரையை எடுத்து வீசும் நோக்கமென்ன?

திராவிடர் கழகத்தில் பொப்பிலிகளோ பித்தாபுரங்களோ கிடையாது. டாக்டர் சுப்பராயன்களோ நாடிமுத்துக்களோ கிடையாது. ஜமீன்தார்களோ மிட்டாதார்களோ கிடையாது. மிராசுகளோ ''மேட்டுக் குடி''களோ திராவிடக் கழகம் இருக்கும் திக்கு நோக்கித் திரும்புவதும் கிடையாது. இங்கே இருப்பவர்கள் அனைவரும் உழைத்து உண்ணும் மக்கள். உழைத்தும் உண்ண வழியின்றி தேம்பிக் கிடக்கும் ஏழைக் கூட்டம். இந்த அன்னக் காவடி மன்றத்தைப் பார்த்து இத்தகைய அடாத பழிச் சொல் கூறுகிறதே ''ஜனநாயகம்'', கூறலாமா? கூறிவிட்டு, ஜனநாயகம் என்ற பெயரைத் தாங்கிக் கொண்டும் உலவுகிறதே அந்த ஏடு, இது நியாயமா?

**குற்றச்சாட்டு 5. இனும் ஜமீன் ஒழிப்பை தி. க ஆதரிப்பதாகக் காட்டிக்கொள்வது காங்கிரஸ் மந்திரி சபையைத் தாக்கி அதை இழிவு படுத்துவதற்காகவே அன்றி உண்மையிலேயே இனும்களையும் ஜம களையும் ஒழிப்பதற்கன்று.**

இனும் ஜமீன் இரண்டையு ஒழிக்கும் மசோதாவைக் கா கிரஸ் மந்திரி சபை கொண் வந்திருக்கிறது இதைத் திர விடர் கழகம் ஆதரிக்கிறது இந்த ஆதரிப்பு, மந்திரி சபை யை எதிர்ப்பதாகப் பொருள்ப வது எங்ஙனம்? ஆதரிப்பு என் பதற்கு எதிர்ப்பு என்றும் எதிர்ப்பு என்பதற்கு ஆதரிப் என்றும், வேண்டாம் என் தற்கு வேண்டும் என்றும் வேண்டும் என்பதற்கு வேண் டாம் என்றும், உண்டு என் தற்கு இல்லை என்றும், இல்லை என்பதற்கு 'உண்டு' என்று கம்யூனிஸ்ட் அகராதியில் பொருள் உண்டுபோல் இருக் கிறது. அப்படியாயின் அந் 'அகராதி'யை நாம் படித்ததில்லை என்பதை ஒளிவு மறைவின் யும் கண்ணியமாகவும் ஒப்புக் கொள்ளுகிறோம்.

**குற்றச்சாட்டு 6. திராவிடக் கழ கத்தவர் அடிக்கும் உதைக்கும் சிறைக்கும் பயந்தவர்கள்.**

இதுவரையில் கம்யூனிஸ்ட் நண்பர் கிளத்திய வாதங்கள் அத்தனைக்கும் முடிசூட்டுவது போல் வருகிறது இந்த வாசகம். நாம் சிறைக்குப் பயந்தவர்கள்! எட்டுமுறை சிறை சென்ற மாவீரனின் தலைமையில் கூடி நிற்கும் திராவிடப் பட்டாளம் சிறைக்குப் பயந்த சிறு நரிகள் கூட்டம்! இனிய தமிழுக்கு ஆபத்து என்று கேட்ட காலத் தில், தாளமுத்து நடராசன் என்னும் இரண்டு தமிழ்ச் செல் வங்களைப் பறிகொடுத்தும், அஞ்சாமல், நிமிர்ந்து நின்று போராடிய தமிழ் மறவர் சேனை சிறைக்குப் பயந்தவர் தம் ஈட்டம்! தமிழ் இதயத்தைக் கூரிய ஈட்டிமுனை கொண்டு

(5-ம் பக்கம் பார்க்க)

# கம்யூனிஸ்ட் தம்பி! ஒரு வார்த்தை!

## உண்மைதானே உலவுகிறது! அச்சம் ஏன் உனக்கு!

### மலையுடன் மோதினால் மண்டைதான் உடைபடும்.

### சிறைக்கு அஞ்சும் கோழைகள் எம் பாசறையில் இல்லை!

என்ன திமிரப்பா உனக்கு?
தண்ணீர் குடிக்கிறேன்
பதைக்கூடப் பார்க்காமல்
டயைக் கலக்கிச் சேறாக்கி
டாயே! நான் எப்படி இனி,
ணீர் குடிக்கமுடியும்?"
இல்லையே ஐயா! நான் தண்
ரைக் கலங்கல் ஆக்கவே இல்
ப! அப்படியே நான் கலங்
ஆக்கினால்கூட அதனால் நீங்
குடிக்கும் தண்ணீர் எப்படிக்
ட்டுவிடும்? நான் ஓடையின்
ப்பக்கத்தில் இருக்கிறேன்.
ள் மேற்பக்கத்தில் இருக்கி
ள். தண்ணீர் முதலில் உங்
டம் பாய்ந்துவிட்டுத்தானே
இருக்கும் இடத்திற்கு
கிறது?"
இதோ பார், இந்த வீண்
மெல்லாம் வேண்டாம்.
க்கு வரவர, திமிர் அதிக
விட்டது. இரண்டு ஆண்டுக
குமுன் அதோ அந்த இல
காட்டின் வழியே நான்
ய்க்கொண்டிருந்தபோது நீ
னைத் திட்டவில்லை?"
இல்லவே இல்லை. இரண்டு
டுகளுக்குமுன் நான் பிறக்
இல்லையே! நான் பிறந்தே
மாதங்கள்தானே ஆகின்
"

அப்படியானால் உன் அண்
யிருக்கும் என்னைத் திட்
ன். அண்ணனானால் என்ன,
யானால் என்ன, ஒருவர்
த தவற்றிற்கு மற்றவரும்
தை என்றுதானே அர்த்

"அது எப்படி ஆகும்? மேலும், எனக்கு அண்ணனே கிடையாதே! எங்கள் குடும்பத்திற்கு ஒரே பிள்ளையாச்சே நான்!"

"ஓகோ! இப்போது தெரிந்துகொண்டேன். என்னைத் திட்டியது உங்கள் மாமன்! மாமன்தானே!"

"மாமன் செத்துப்போய் ஐந்து ஆண்டுகள் ஆய்விட்டன என்று அப்பா சொன்னாரே. இரண்டு ஆண்டுகளுக்கு முன் உங்களைத் திட்டியது என் மாமா அல்ல."

"மாமா இல்லையென்றால் உங்கள் அப்பாவாய் இருக்கும். யாராய் இருந்தால் எனக்கென்ன? அதற்கு, பழிக்குப் பழி வாங்காவிட்டால் என் பெயர் ஓநாயா? பார்க்கிறேன் ஒரு கை. இன்று உன்னை தீர்த்துவிட்டுத்தான் மறு வேலை. ஆமாம், எவ்வளவு நாட்களாக என்னை ஏமாற்றிக்கொண்டே வந்தீர்கள்?"

ஓநாய், நீர் குடித்துக்கொண்டிருந்தது காட்டருவி ஒன்றில். ஆட்டுக்குட்டியொன்று நீர் குடிக்க வந்தது அங்கு. பார்த்தது ஓநாய். இந்த ஆட்டுக்குட்டியைக் கொன்று 'ருசி' பார்த்துவிடுவது என்று முடிவு கட்டிவிட்டது. ஆனால் ஆட்டுக்குட்டியைக் கொல்ல ஒரு காரணம் வேண்டுமல்லவா? அதற்காகக் கூறிற்று 'நீ தண்ணீரைக் கலக்கிவிட்டாய்' என்று. அது தவறு என்று தெரிந்ததும் 'இரண்டு ஆண்டுகட்குமுன் என்னைத் திட்டினாயே' என்று 'ஒரு போடு போட்டது.' அதுவும் தவறு என்று தெரிந்ததும் ஆட்டுக்குட்டியின் அண்ணன் மாமன் தகப்பன் என்று தனக்குத் தோன்றியவர்களையெல்லாம் குறிப்பிட்டு அவர்கள்தான் திட்டியிருப்பார்கள் என்று சொல்ல ஆரம்பித்துவிட்டது ஓநாய். கடைசியில் ஆடு, ஓநாய்க்கு இரையாயிற்று.

இந்த 'ஓநாயும் ஆட்டுக் குட்டியும்' தமிழர்க்கெல்லாம் அறிமுகமானவர்கள்தான் — சிறு குழந்தைப் பருவமுதல்!

"ஒரு நாயைக் கொல்ல வேண்டுமானால் அதைச் சும்மா கொன்றுவிடாதே. அதற்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று சொல்லிவிட்டுக் கொல்." என்று ஆங்கிலத்திலும் ஓர் பழமொழி உண்டு. இதன் கருத்து, "யாரையாவது தாக்கத்தான் ஆகவேண்டும் என்று உனக்குத் தோன்றினால் தாக்கு; தாராளமாகத் தாக்கு; உன் மனம் போன மட்டும் தாக்கு; ஆனால் அதற்கு ஒரு காரணத்தை மட்டும் முன்கூட்டியே கற்பித்துவிட்டுத் தாக்கு" என்பதுதான்.

தமிழ் நாட்டிலே உள்ள "**மாஸ்கோ நோக்கிகள்**" காரல் மார்க்சுடனும், லெனின் உரையுடனும், ஸ்டாலின் எழுத்துடனும் கொஞ்சிய நேரம் போக மிஞ்சிய நேரத்தில் இந்தப் பழமொழியையும் படித்திருக்கிறார்

கள்! ஒநாய்க் கதையையும் தேடி எடுத்துப் புரட்டிப் பார்த்து அதன் கருத்தைத் திட்டவட்டமாக உணர்ந்தும் இருக்கிறார்கள்! உணர்ந்ததோடு நில்லாமல், நடைமுறையில் அந்தப் போர் முறையைக் கையாளவும் தொடங்கிவிட்டார்கள். ஆனால் திராவிடர் கழகம் அவர்கள் நினைப்பதுபோல ஆட்டுக் குட்டியல்ல; நாய்க்குட்டியுமல்ல; அது, சீறிப் பாயும் சிறுத்தை. அது நாய்போலவோ ஆடுபோலவோ யாருக்கேனும் தோன்றுமானல் குற்றம் அதனிடத்தில் இருக்கிறது என்றல்ல பொருள். பார்ப்பவர் கண்களிலே ஏதோ கோளாறு இருக்கிறது என்பதுதான் பொருள்.

திராவிடர் கழகம், தென்னாட்டில் மடமடவென வளர்ந்து வரும் ஓர் புரட்சிப் புயல்; ஆயிரமாயிரம் வாலிப உள்ளங்களின் இருதய கீதம்; மாணவர்கள் பாட்டாளிகள் உழவர்கள் ஆசிரியர்கள் தொழிலாளிகள் பொது மக்கள் அனைவரையும் தன்பால் ஈர்க்கும் வசீகரம் நிறைந்த புதுச் சக்தி; எல்லோர்க்கும் எல்லாமும் இருப்பதான இடம் நோக்கிச் செல்வது அதன் இலட்சியம். ஏழை யென்றும் அடிமை யென்றும் எவருமில்லை சாதியில் என்ற மொழி அதன் வழிகாட்டி. எண்ணத் தொலையாமல் ஏட்டில் அடங்காமல் இங்கே உள்ள சாதிகள் அத்தனையையும் இடித்து நொறுக்கி உடைத்துத் தூளாக்கி, அதில் சமதர்மம் எனும் இரசாயனத்தைக் கலந்து பகுத்தறிவு முறையில் புதிய சமுதாயத்தை உருவாக்குவது அதன் நோக்கம். இந்த நோக்கத்தை நிறைவேறவொட்டாது தடுப்பார் யாவராயினும்—அவர் ஆண்டவனாயினும் சரியே, அவர் அடிதொழுதிடும் அடியவர் குழுவினர் ஆயினும் சரியே, காந்தியாராயினும் சரியே, அவரை ஏற்றிப் போற்றிடும் கம்யூனிஸ்ட் தோழராயினும் சரியே—அவர் அனைவரையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு முன்னேற்றப் பாதையில் தென்னாட்டைச் செலுத்துவது, அதன் நடைமுறைத் தொண்டு. பயங்கரப் புரட்சி வாதிகள் என்றும் 'அண்டர் கிரவுண்டுகள்' என்றும் பெருமை யடித்துக் கொள்ளும் கம்யூனிஸ்டுகளும் சொல்ல நடுங்கும் பல அதிதீவிர எண்ணங்களும் புரட்சிகளும் சர்வ சாதாரணமாகச் சிரித்து விளையாடும் திராவிடர் கழக மேடையில். பரம்பரை பரம்பரையாக மக்கள் உள்ளத்தில் ஊறிப் போயிருக்கும் தலைவிதி தத்துவத்தைக் கொஞ்சம் அசைப்பதற்கே அச்சம் கம்யூனிஸ்ட்டு கட்சு! ஆனல் திராவிடர் கழகம் தலைவிதி தத்துவத்தை மட்டுமல்ல, வேதம் புராணம் இதிகாசம் சாஸ்திரம் சாதி மதம் சடங்கு சம்பிரதாயம் பஞ்சாங்கம் முதலான அதன் அடிப் படைகளையே ஆட்டங் கொடுக்கச் செய்து விட்டது.

வளர்ந்துவரும் திராவிடர் கழகம் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கை வேகமாக அசைத்து வருகிறது. இது அவர்கள் உள்ளத்தில் எரிச்சலை மூட்டுகிறது. நம்மைத் தாக்கவேண்டும், தாக்கி அழிக்கவேண்டும், அழித்து அடக்கவேண்டும் என்ற ஆவேசத்தையும் அவர்கள் நெஞ்சத்தில் எழுப்பிவிட்டது. தாக்க வேண்டுமென்று துடிக்கிறார்கள், ஆனல், தாக்குதற்கோ வழியில்லை. நம்மை ஒழித்துக்கட்டிவிட்டுத்தான் மறுவேலை பார்க்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள்—ஆனல் அதற்குரிய முறையோ அவர்கட்குப் புலப்படவில்லை. இருந்தால்தானே புலப்பட! திராவிடர் கழகத்தைப்

பிற்போக்குச் சக்தி எ
சொல்லித் தூற்றுதற்கில்லை.
டிலே பல்வேறு முற்போ
இயக்கங்களை மூட்டிவிடும் மு
சக்தி அது. அதனை முத
களின் முகாம் என்று சித்த
தற்கும் இல்லை. முதலா
இருக்கும் திக்கு நோக்கி
அது படுப்பதில்லை. மதம் எ
பேய்பிடித்த மதோன்மத்த
என்று கூறுவதற்குமில்லை.
விடர் கழகத்தவரை அப்
கூறினல் கூறுபவரை எ
நகையாடுவர் ஊரார். ஏகா
திய தாசர்கள் என்று ப
தற்குமில்லை. கம்யூனிஸ்
காணவே மறுக்கும் வட
ஏகாதிபத்தியத்தின் இரு
வலையை அறுத் தெறிபவ
அவர்கள்தான்.

உண்மையைச் சொல்
னல், கம்யூனிஸ்டுகள் திரா
கழகத்தவரைப் பாராட்ட
டும்—அவர்கள் எந்தக் கார
தாலோ உள் நுழைய அ
பல அக்கிரமக் கோட்டைக
பிடித்துக் குலுக்குகிறது
விடர் கழகம். பாராட்ட மு
வில்லை—அது தம் கௌ
திற்குக் குறைவு—அல்லது
நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சி
தாக்கீதுக்கு மாறு—எ
தோன்றுமானல் வாய்
மௌனிகளாகவாவது இ
வேண்டும். இரண்டும் இ
தாக்குகிறார்கள்! தாக்கு
நமக்கு எட்டி அல்ல,
வெறுக்க. பிறர் தாக்கித்
கியே உரம் ஏறிப்போன
லும் உள்ளமும் படைத்
கள் நாம். எனவே வர
றோம் அவர்கள் தாக்குத
பொங்கற் புது நாளில் க
கரும்பினை வரவேற்பதுபோ
ஆனல் அவர்கள் தாக்கு
பொருள் இல்லையே அதுக
தான் வருந்துகிறோம். பிறர்

(8-ம் பக்கம் பார்க்க)

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (H